# இலாபம் தரும் நாட்டுக்கோழி வளர்ப்பு

**வெ. தனசீலன், ம செல்லப்பாண்டியன் மற்றும் சு. வசந்தகுமார்**

கால்நடைப் மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
இராமையன்பட்டி, திருநெல்வேலி– 627 358

நாட்டுக்கோழிகள் தற்பொழுது இறைச்சி மற்றும் முட்டைக்கோழி வளர்ப்பைப் போன்று தீவிர முறையில் வளர்க்கப் படுகின்றன. இவை இறைச்சிக்காவும், முட்டை உற்பத்திக்காகவும் வளர்க்கப்படுகின்றன. இறைச்சிக் கோழிகளை ஒப்பிடும் போது இவற்றின் இறைச்சியில் கொழுப்புச்சத்து சற்று குறைவாகவும் புரதசத்து கூடுதலாகவும் உள்ளன. மேலும் நன்மை தரக்கூடிய ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் அதிகம் உள்ளன. தமிழ்நாட்டில் உணவு விடுதிகளில் தற்போது நாட்டுக்கோழி இறைச்சியின் வெவ்வேறு உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன. நாட்டுக்கோழிகளின் எலும்பு களையும், இறைச்சியையும் சுவைத்து உண்பதற்கு உகந்ததாக இருப்பதாலும் அவற்றின் மணம் வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று இருப்பதாலும் அவற்றுக்குச் சந்தையில் நல்ல விலை கிடைக்கின்றன.

நாட்டுக்கோழிகள் இயற்கையிலேயே குறைந்த முட்டை உற்பத்தியும் மற்றும் முட்டை எடையும் கொண்டுள்ளன. வளர்ச்சி வேகமும் மெதுவாக இருக்கிறது. 22 வாரத்தில் பருவம் அடைந்து முட்டையிடத் தொடங்குகின்றன. முட்டைகள் பழுப்பு நிறத்துடன் 40–45 கிராம் எடையில் ஆண்டுக்கு 60–70 முட்டைகள் இடும். அடை முட்டை உற்பத்திக்காக நல்ல தரமான பெட்டை மற்றும் சேவல்களை 1:8 என்கிற விகிதத்தில் தேர்வு செய்து வைத்துக் கொள்ளலாம். 22 வாரத்திற்கு மேல் முட்டையிட ஆரம்பித்து 72 வாரம் வரை முட்டை உற்பத்திக் காகப் பராமரிக்கலாம்.

நாட்டுக்கோழி முட்டைகளைக் கோழிகளில் அடைவைத்தோ அல்லது குஞ்சு பொரிக்கும் எந்திரங்கள் மூலமாகவோ பொரிக்கலாம். இதன் குஞ்ச பொரிக்கும் காலம் 21 நாட்கள், பிறகு 1 நாள் வயது குஞ்சுகள் 30–32 கிராம் எடை இருக்கும். நாட்டுக்கோழிகளில் குறிப்பிட்டுச் சொல்லும் படி இனங்கள் ஏதும் இல்லை. சண்டைக் கோழியினங்கள் (Aseel), கழுகுக் கோழி இனங்கள் (Nacked Neck) சில்பாக்கோழி (Frizzled Chicken), கருங்கோழி ( Kadak Nath) போன்ற இனங்கள் உண்டு. வெவ்வேறு வகையான நாட்டுக் கோழியினங்கள் கலந்த இனம் பல வண்ணங்களில் தற்போது உள்ளன.

### (அ) நாட்டுக்கோழி வளர்ப்பு முறைகள்

1. புறக்கடை வளர்ப்பு முறை (Backyard Rearing System)
2. மேய்ச்சலுடன் கொட்டகையில் வளர்ப்பு முறை ( Semi Intensive Rearing System)
3. கொட்டகையில் ஆழ்கூள வளர்ப்பு முறை (Deep Litter Rearing by Intensive Stystem)
4. கூண்டு வளர்ப்பு முறை ( Cage Rearing System)

### 1. புறக்கடை வளர்ப்பு முறை (Back yard Rearing System)

இம்முறை தொன்றுத் தொட்டு நம் நாட்டில் கிராமங்களில் பின்பற்றி வரும் வளர்ப்பு முறையாகும். இது குறைந்த இடத்தில், சிறிய எண்ணிக்கையில் தீவனத்திற்கென்றோ

நோய்த்தடுப்பு முறைக்கென்றோ அதிகம் செலவு செய்யாமல் வளர்க்கும் முறையாகும். மூலதனம் குறைவு, இலாபமும் குறைவு. 10–20 எண்ணிக்கைக்கு ஏற்றது.

2. மேய்ச்சலுடன் கொட்டகையில் வளர்ப்பு முறை ( Semi intensive rearing system)

தென்னந்தோப்புகளில், தோட்ட வீடுகளில் பகல் நேரங்களில் கோழிகளை மேயவிட்டு இரவில் அடைத்து வளர்ப்பது, 50–100 கோழிகளுக்கு ஏற்றது.

3. கொட்டகையில் ஆழ்கூள வளர்ப்பு முறை ( Deep Litter Rearing by Intensive System)

தீவிர முறையில் அதிக எண்ணிக்கையில் முற்றிலும் கொட்டகையில் அடைத்து வைத்து, தீவனம், மருந்து தடுப்பூசி ஆகிய வைகளை முறையாகக் கொடுத்து, குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கும் உடல் எடையை அடையச்செய்து மொத்தமாக விற்பனை செய்தல் ( 1000–5000 கோழிகள் வரை).

4. கூண்டு வளர்ப்பு முறை ( Cage Rearing System)

செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் அடை முட்டை உற்பத்தி செய்ய ஏற்றமுறை யாகும்.

**(அ) கொட்டகை அமைத்தல்**

நாட்டுக் கோழிகளுக்கானப் பண்ணை அமைப்பு இறைச்சிக் கோழிகளுக்கு அமைப்பதைப் போன்று அமைத்துக் கொள்ளலாம். பிரத்யோகமாக ஒரு நாள் குஞ்சுகளை வாங்கி இறைச்சிக்காக வளர்த்து விற்பனை செய்வதாக இருந்தால் ஆழ்கூள முறையில் கோழி ஒன்றுக்கு ஒரு ச.அடி இடவசதி போதுமானது. முட்டை உற்பத்தி செய்ய வேண்டுமெனில் இரண்டு ச.அடி இடவசதி தேவை.

கொட்டகையின் அகலம் 20–25 அடி, இருக்க வேண்டும். நீளம் கோழிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும். உயரம் 16–18 அடி பக்கவாட்டில் உயரம் 6–8 அடி. கொட்டகையை தரை நிலைட்டத்திலிருந்து 1–2 அடி உயரமாக அமைத்திட வேண்டும். இல்லையெனில் ஈரக்கசிவு அல்லது மழைக்காலத்தில் மழைநீர் பண்ணைக்குள் வர வாய்ப்புண்டு. பக்க வாட்டில் கவர் 1 அடி உயரம் போதும். பாம்பு, கீரி, பூனைப் போன்ற பிற விலங்கினங்கள் உள்ளே வந்து விடாதவாறு, சிறிதும் இடைவெளியின்றி மீதி இடத்தைக் கோழிவலை அல்லது கம்பி வலை கொண்டு அடைத்துவிட வேண்டும். தரை கெட்டியாக சிமெண்ட் கான்கீரீட்டால் போட வேண்டும். அப்பொழுது தான் ஒவ்வொரு முறையும் கோழிகளை விற்பனைச் செய்த பிறகு ஆழ்கூளத்தை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**(ஆ) இளம் குஞ்சுகள் பராமரிப்பு**

இளம் குஞ்சுகளைத் தருவிப்பதற்கு முன்பு அதற்கான அறையைச் சுத்தம் செய்து தரையை சுண்ணாம்பு அடித்துக் காய வைத்து விட வேண்டும். நெல் உமி சிறிது போட்டு அதற்கு மேல் பழைய செய்தித்தாள்களைப் பரப்பி 1 அடி உயரமுள்ள தகடுகளினால் ஆன புரூடர் வட்டம் அமைக்க வேண்டும். 1.5 மீட்டர் விட்டமுள்ள புரூடர் வட்டத்தில் சுமார் 200 குஞ்சுகள் வரை வளர்க்கலாம்.

ஆரம்பத்தில் 92° F வெப்பம் கொடுக்க வேண்டும். பிறகு வெப்பத்தை இரண்டாவது வாரத்தில்5° F குறைத்துக் கொள்ளலாம். வெப்பத்திற்காக மின்சார பல்புகள் அல்லது கரி பானைகளைப் பயன்படுத்தலாம். மூன்று நாட்கள் கழித்துச் செய்தித் தாள்களை நீக்கி விட்டு வட்டத்தில் வைத்து வளர்க்க வேண்டும். பின்பு புரூடர் வட்டத்தைப் பிரித்துவிட்டுக் குஞ்சுகளை உமியின் மேல் விட்டுவிடலாம். இரண்டாவது வாரத்தில் இரவில் மட்டும் வெப்பம் கொடுத்தால் போதுமானது.

ஆரம்பத்தில் தண்ணீரைக் காய்ச்சி ஆறவைத்துப் பின்பு அதில் குளுக்கோஸ் (50 கி/லிட்டர் தண்ணீரில்கலந்து கொடுக்க

வேண்டும். பிறகு நோய் எதிரியுயிரி மருந்து களையும் வைட்டமின் மற்றும் ஜீரணச் சத்து மருந்துகளையும் நல்ல வளர்ச்சிக்காகத் தண்ணீரில் கலந்து கொடுத்து வரவேண்டும்.

**(இ) அலகு வெட்டுதல்**

இரண்டு வாரம் முடிந்ததும் நாட்டுக் கோழிக்குஞ்சுகளுக்குக் சுட்டாயம் மின்சார அலகு வெட்டும் கருவி கொண்டு அலகு தீய்ந்து விட வேண்டும். இது குஞ்சுகளை ஒன்றோடு ஒன்று கொத்திக் கொள்வதைத் தடுத்துத் தீவன விரயத்தையும் தடுக்கும். இரண்டாவது முறை மீண்டும்9 அல்லது 10 வாரத்தில் அலகு வெட்டி விட வேண்டும்.

**(ஈ) நோய்த் தடுப்பு முறைகள்**

நாட்டுக்கோழிகளை வெள்ளைக் கழிச்சல், கோழி அம்மை போன்ற நச்சுயிரிநோய்களும், *இ.கோலை சால்மோனெல்லோசிஸ் கோழிக்காலரா* போன்ற நுண்ணுயிரி நோய்களும், இரத்தக் கழிச்சல் போன்ற ஒட்டுண்ணி நோய்களும் பாதிக்கின்றன. அவற்றைக் கீழ்க்காணும் தடுப்பூசி மருந்துகளைப் போட்டு நோய் வராமல் தடுக்கலாம்.

**தடுப்பூசி அட்டவணை**

| வயது | தடுப்பூசியின் பெயர் | அளிக்கும்முறை |
|---|---|---|
| 5–7 ஆவது நாள் | ஆர் டி / வி/ எப் 1 | மூக்கு மற்றும் கண்ணில் சொட்டு மருந்தாக |
| 28 ஆவது நாள் | ஆர் டி வி (லசோட்டா) | குடி தண்ணீரில் |
| 6 ஆவது வாரம் | கோழி அம்மை | இறக்கையில் |
| 8 ஆவது வாரம் | ஆர். டி. வி. கே | இறக்கையின் தோலுக்கடியில் |

**(உ) தீவனம் அளித்தல்**

ஆரம்பத்தில் குஞ்சுகளுக்குத் தேவையானத் தீவனத்தைச் செய்தித் தாள்களின் மேல் தூவிவிட்டு, பின்பு தீனியைத் தட்டுகளில் அளிக்கலாம். தீவனத்தில் புரதம் 22 சதவிகிதமும், எரிசக்தி 2750 கிலோ கலோரி ஒரு கிலோ தீனியில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

**மாதிரித் தீவனக் கலவை அட்டவணை**

| மூலப்பொருள் | இளம் குஞ்சுத் தீனி | வளரும் பருவக் கோழித்தீனி | முட்டைக்கோழித் தீனி |
|---|---|---|---|
| மக்காச்சோளம் | 30 | 25 | 35 |
| வெள்ளைச்சோளம் மற்றும் கம்பு | 20 | 30 | 22 |
| எண்ணெய் நீக்கிய அரிசித் தவிடு | 10 | 10 | 10 |
| கோதுமைத் தவிடு | – | 12 | – |

| | | | |
|---|---|---|---|
| கடலைப்பிண்ணாக்கு | 12 | 10 | 10 |
| இதர வகைப் பிண்ணாக்குகள் | 10 | 6 | – |
| சோயா மொச்சைத்தூள் | 7.5 | – | 8 |
| மீன் தூள் | 8 | 5 | 7.5 |
| தாதுக்கலவை | 2.5 | 2 | 2.5 |
| கிளிஞ்சல் தூள் | – | – | 5 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** |

| | | | |
|---|---|---|---|
| வைட்டமின் கலவை (ஏ.பி2.டி3) | 25 கி | 25கி | 25கி |
| இரத்தக்கழிச்சல் தடுப்பு மருந்து | 50 கி | 50கி | – |

**(எ) விற்பனை**

நாட்டுக்கோழிகளை 3 மாதம் முடிந்ததும் விற்பனை செய்ய ஆரம்பித்து நான்கு மாதங்களுக்குள் விற்று முடித்துவிட வேண்டும். இப்பருவத்தில் 3.5 – 4.0 கிலோ வரை தீனி உண்டு 1.1 முதல் 1.3 கிலோ உடல் எடை அடையும். நல்ல தரமானப் பெட்டைக் கோழிகளைத் தேர்வுச் செய்து முட்டை உற்பத்திக்காக வளர்க்கலாம். அவை 22 வார வயதில் முட்டையிடத் தொடங்கும். நாட்டுக்கோழி முட்டைகளை உணவு பயன்பாட்டிற்காக உற்பத்திச் செய்தும் விற்பனை செய்யலாம்.


**பசுந்தீவனம் விற்பனைக்குள்ளன**

*தரமான பசுந்தீவன உற்பத்தி – கமபு நேப்பியர் கோ 4*
கரணைகள் உற்பத்தி செய்து
விற்பனை செய்கிறோம்.

*கரணை ஒன்றின் விலை ரூபாய் 0.40 பைசா மட்டுமே*

தங்களுக்குத் தேவைப்படும் கரணைகளை வாங்கிப் பயனடைய
அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முகவரி : செயலர்
வினோபா சேவா சங்கம், தென்னிலை – 639205, கரூர் மாவட்டம்
கைபேசி : 9994055060



Printed and Published by Dr. D. Kathiresan, M.V.Sc., Ph.D., Director of Extension Education on behalf of Tamilnadu Veterinary and Animal Sciences University, University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai - 600051, Ambathur Taluk, Tiruvallur District. Editor : Dr. T. Sivakumar, Ph.D.